# இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

## அலகு - 03

**(i) மிஷனரி இயக்கம் என்றால் என்ன ?**

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகைதந்த தொண்டர் அமைப்புகளின் வழிமுறைகள் மிஷனரி இயக்கம் எனப்பட்டது.

### பிரித்தானியர் ஆட்சியில் இலங்கைக்கு வருகை தந்த மிஷனரி இயக்கங்கள்

| மிஷனரி | ஆண்டு | பிரதேசங்கள் |
|---|---|---|
| லண்டன் மிஷனரி சங்கம் | 1804ல் | - |
| **பப்டிஸ்ட் மிஷனரி சங்கம்** | **1812ல்** | **கொழும்பு** |
| வெஸ்லியன் மிஷனரி சங்கம் | 1814 - 1815ல் | வடக்குக், கிழக்குப் பகுதிகள் |
| **அமெரிக்கன் மிஷனரி சங்கம்** | **1816ல்** | **யாழ்ப்பாணம், வடபகுதி** |
| சேர்ச் மிஷனரி சங்கம் | 1818ல் | கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி |

### மிஷனரியினர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள்

- **எழுத்து ஊடகம்**
- **சொற்பொழிவும் கல்வியும்**
- **சமூகசேவை நடவடிக்கைகள்**

**I. எழுத்து ஊடகத்தைப் பயன்படுத்தியமை.**

1. தேசிய மொழியில் அறிவைப் பெற்றுக்கொள்ளச் சிங்களத்தையும் தமிழையும் கற்றனர்.
2. பைபிளைச் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிட்டனர்.
3. தமிழ் சிங்கள மொழிகளில், நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிட்டு விநியோகித்தனர்.
4. அச்சகங்கள் அமைப்பதற்கும் நூல்கள், சஞ்சிகைகள் அச்சிடுவதற்கும் பணமும் ஒழுங்கமைப்பதற்குத் திறனும் பெற்றிருந்தனர்.
5. மிஷனரிகளால் அச்சிடப்பட்ட வெளியீடுகள் சில.

   மாசிக்க தேக்க (1832) சேர்ச் மிஷனரி சங்கம்
   **லங்கா நிதானய (1840) சமய பூஸ்திகா சங்கம்**
   உரகல (1842) பெப்டிஸ்ட் மிஷனரி

**II. சொற்பொழிவும் கல்வியும்.**

1. மிஷனரி குருமார் பன்சாலை அருகிலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி தமது சமயத்தைப் பரப்பினர்.
2. ஆங்கிலம் மூலம் கல்வி வழங்கும் பாடசாலைகள் அமைத்து அவற்றை நடாத்திச் செல்வதில் ஈடுபாடு காட்டினர்.
3. மிஷனரிக்கல்வி முறையின் நவீன கட்டடங்கள், நவீன பாடத்திட்டம், தளபாடங்கள் போன்ற நவீன வசதிகள் சுதேசிகளைக் கவர்ந்தன.
4. மிஷனரிப் பாடசாலைகளுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைத்தமை.
5. ஆங்கிலம் மூலம் கல்வி வழங்கும் உயர் பாடசாலைகளை நகரங்களில் நிறுவியமை. இங்கு கல்வி கற்பது கவர்ச்சியாகக் கருதப்பட்டது.
6. அரசாங்கத்தில் பதவி, சலுகை பெற ஆங்கில மொழி அறிவு தேவைப்பட்டமை.

I. Gowthaman

## பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள்

- மிஷனரியினரின் எழுத்து, சொற்பொழிவு பிரசார ஊடகங்கள் பௌத்த இந்து மதத்தவர்கள் போலியான அர்த்தமற்ற சிலைகளை வணங்குபவர்கள் என்ற கருத்தைப் பரப்பியமை.
- பௌத்த இந்து பழக்கவழக்கங்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டமை. இவ்மதங்களின் அனுஷ்டானங்களை இழிவாக மதித்தமை.
- அரச ஆதரவின்றித் தாய்மொழிப் பாடசாலைகள் வீழ்ச்சியடைந்தமை.
- தேசிய மொழிகளிலான கல்வி எழுச்சி அடையச் செய்வதற்கான தேவை எழுந்தமை.

## பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள்

- **பிரிவெனாக்கல்வி முறை மீளவும் ஆரம்பிக்கப்படல்.**

  I. **வலானை சித்தார்த்ததேரர்** 1835ல் **இரத்மலானை பரதர்ம சைத்திய பிரிவெனாவை** ஆரம்பித்தமை.

  II. **ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்** 1873ல் **மாளிகாகந்த வித்தியோதயப் பிரிவெனாவைத்** தோற்றுவித்தார்.

  III. **இரத்மலானை தர்மலோக தேரர்** 1875ல் **பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனாவை** ஆரம்பித்தார்.

  இவ்வாறு பழைய பிரிவெனாக் கல்வி முறை மீளவும் ஆரம்பமாகிக் கல்விமான்கள் தோன்றியமை சமய மறுமலர்ச்சிக்கான ஆசீர்வாதமாக அமைந்தது.

- **அச்சகங்கள் நிறுவப்படல்.**

  I. பௌத்தர்களிடம் இதுவரை அச்சகம் இல்லாத குறைபாட்டைத் தீர்க்க **ஸ்ரீ சுமண திஸ்ஸதேரர்** நடவடிக்கை மேற்கொண்டார்.

  II. இலங்கையில் செல்வந்தர்கள், சீயநாட்டு அரசரின் உதவியைப் பெற்று **1862** இல் காலியில் லங்கோபகார அச்சகத்தை நிறுவினார்.

  III. **பௌத்தர்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அச்சகங்கள் பல அமைக்கப்பட்டன.**
  **உ<u>தாரணம்</u>** - லங்கோபகார அச்சகம், சுதர்ஷண அச்சகம், கடவதிகஅச்சகம், சரவிசந்தரஸ அச்சகம்

  IV. **பௌத்தர்களின் வெளியீடுகள் சில**

  **உ<u>தாரணம்</u>** - லக்மினி பஹன (1862)
  **சரவி சந்தரெஸ (1880)**
  சிங்கள ஜாதிக (1902)
  **லங்கா லோகய**
  சிங்கள பௌத்தய

- **பகிரங்க விவாதங்களை நடாத்துதல்.**

  I. மிஷனரிமார் பௌத்த சமய நூல்களிலுள்ள கருத்துக்களை விமர்சித்தனர்.

  II. 1860ல் கோகர்லி எனும் பாதிரியார் பௌத்த சமயம் பொய்யானது என நிரூபிக்க ஆதாரங்களைத் திரட்டினார்.

  III. இதற்குப் பதிலடி கொடுப்பதற்காகப் பௌத்தர்களும் சொற்பொழிவு முறையைக் கையாண்டனர். பகிரங்க விவாதங்களில் ஈடுபட்டனர்.

  IV. மிஷனரிமார்களுடன் இடம்பெற்ற ஐம்பெரும் விவாதங்களில் பௌத்த குருமார் முன்னணியில் திகழ்ந்தனர்.

  V. **ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்கள்**

  1. **பத்தேகம விவாதம் 1865 இல்**
  2. வாரகொட விவாதம் 1865 இல்
  3. **உதன்விட விவாதம் 1866 இல்**
  4. கம்பளை விவாதம் 1871 இல்
  5. **பாணந்துறை விவாதம் 1873** இல் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஐந்து விவாதங்கள் பஞ்சமகா விவாதங்கள் எனப்படுகின்றன.

I. Gowthaman

**VI. விவாதங்களில் பங்குபற்றிய பௌத்த குருமார்கள்**

1. மீகெட்டுவத்தே குணானந்த தேரர் (தலைமை)
2. **ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்**
3. வஸ்கடுவ சுபுதி தேரர்
4. **பொத்துவில இந்திரஜோதி தேரர்**
5. இரத்மலான தம்மாலோகதேரர்

**VII. பஞ்ச மகா விவாதங்களினால் கிடைத்த பயன்கள்.**

1. **விவாதங்களில் பாணந்துறை விவாதம் சர்வதேசப் பிரசித்திபெற்றது.**
2. வெளிநாட்டு வேற்று மதத்தவர்களின் கவனம் பௌத்த சமயத்தின் மீது திரும்பியது.
3. பௌத்த மறுமலர்ச்சியில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது.
4. **அமெரிக்கரான ஹென்றிஸ்டில் ஒல்கொட், ரஷ்ய நாட்டவரான ஹெலான பிளவஸ்கி அம்மையார் முதலியோர் இலங்கை வந்தனர்.**

❖ **பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தல்.**

1. 1880 ஆம் ஆண்டிற்கு முன் பௌத்த பாடசாலைகளை உருவாக்குவதற்கு அமைப்பு ரீதியிலான பலம் இருக்க வில்லை.
2. ஹென்றி **"ஸ்டில் ஒல்கொட்"** இந்நாட்டிற்கு வருகை தந்து பௌத்த பாடசாலைகள் அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார்.
3. ஒல்கொட் வழிகாட்டலில் அமைக்கப்பட்ட பௌத்த **பிரம்மஞான சங்கத்தின்** முக்கிய நோக்கம் பௌத்த பாடசாலைகளை ஆரம்பிப்பதாகும்.
4. ஒல்கொட் பௌத்த பாடசாலைகள் நிதியம் ஒன்றினை உருவாக்கினார். அந்நிதியத்திற்கு உதவிபெற ஒல்கொட் அவர்கள் பௌத்த குருமார்களுடன் கிராமம் தோறும் விஜயம் செய்ததால் பௌத்தர்களிடையே புதிய உத்வேகம் ஏற்பட்டது.

➢ **பௌத்த பாடசாலைகள் உருவாக்கும் இயக்கத்தின் முன்னின்று செயற்பட்டவர்கள்**

1. ஹென்றி ஸ்டில் ஒல்கொட்
2. **ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்**
3. இரத்மலான ஸ்ரீ தர்ம லோக தேரர்
4. **வஸ்கடுவ ஸ்ரீ சுபுதி தேரர்**
5. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்.
6. **டொன் கரோலிஸ் ஹேவாவதான**
7. அநாகரிக தர்மபாலா
8. **டி. எஸ் சேனநாயக்கா**
9. ஆதர். வீ தியெஸ்

➢ **இலங்கையில் முக்கிய நகரங்களில் பௌத்த பாடசாலைகள் நிறுவப்பட்டன.**

1. கொழும்பு ஆனந்தா கல்லூரி
2. **கண்டி தர்மராஜா கல்லூரி**
3. காலி மஹிந்தா கல்லூரி
4. **மாத்தளை விஜய கல்லூரி**
5. கம்பளை ஜினராஜ வித்தியாலயம்
6. **நாவலப்பிட்டி அநுருத்த வித்தியாலயம்**

I. Gowthaman

## கல்வி மறுமலர்ச்சியின் விளைவுகள்

- கல்வி மறுமலர்ச்சியினால் மக்களின் எழுத்தறிவு மேம்பாடடைந்தது.
- 1884ல் ஒல்கொட் அவர்களினால் அரசாங்கத்தின் மூலம் வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை நாளாக்க முடிந்தது.
- பௌத்த கொடியை உருவாக்க ஒல்கொட் காரணமானார். இக்கொடியே இன்றும் உலக பௌத்தர்களின் கொடியாக விளங்குகிறது.
- தேசியகல்வி மறுமலர்ச்சியினால் தேசிய கலாசாரத்தை மதிக்கும் துடிப்பான வாலிப பரம்பரை உருவானது.
- அநாகரிக தர்மபால, ஜோன். த. சில்வா, வலிசிங்க ஹரிச்சந்திர, பியதாஸசிரிசேன போன்ற தலைவர்கள் தேசிய வாதத்தையும் தேசியப் பற்றையும் உருவாக்கும் வண்ணம் செயற்பட்டனர்.

## தேசப்பற்றை வளர்க்கும் இயக்கம்

**நோக்கங்கள்**

- தேசிய கலாசாரத்தை மதிக்க மக்களைத் தூண்டுதல்.
- தேசத்தின் மீது பற்றுக்கொண்ட மக்களை உருவாக்குதல்.

### அநகாரிக தர்மபால

- இந்நாட்டின் பழைமையான கலாசாரத்தின் முக்கியத்துவத்தையும் பௌத்த சகவாழ்வின் மேன்மையையும் விளக்கி புதிய சிந்தனைகளை மக்கள் முன்வைத்தார்.
- பௌத்த சமயம், தேசிய கலாசாரம், ஒழுக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.
- பகிரங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். சிக்காகோவில் நடைபெற்ற சமய பாராளுமன்றத்தில் "தர்ம" பற்றி உரை நிகழ்த்தினார்.
- 1891 இல் வெளியிடப்பட்ட மகாபோதி சஞ்சிகை, வாரந்த வெளியீடான **"சிங்கள பௌத்தய"** மூலம் பௌத்த மக்களிடையே போராட்ட உணர்ச்சியைத் தோற்றுவித்தார்.

### பியதாஸ சிறிசேன

- தமது நாவல்கள் மூலமும் சிங்களஜாதிய என்ற பத்திரிகை மூலமும் இலங்கையர் ஆய்ந்தறியாமல் மேற்கத்தேய நாகரிகத்தைத் தழுவிக் கொள்கின்றமையை விமர்சித்தார்.

## பௌத்த புனித தலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை

- 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து அநுராதபுரம், பொலன்னறுவைத் தலைநகரங்களை அண்டியிருந்த பௌத்த சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பதில் மக்கயிடையே உத்வேக உணர்வு பிறந்தது.
- ஐரோப்பிய கல்விமான்களான **ஜோர்ஜ்டர்னர், ரிஸ் டேவிஸ், எச். சீ. பி. பெல், ஹென்றி பாக்கர்** என்போர் தொல்பொருள் அகழ்வுகளில் ஆய்வுகளில் ஈடுபட்டு புராதன கலாசாரம் பற்றிய விடயங்களை முன் கொணர்ந்தனர்.
- இவர்கள் எழுதிய நூல்களுக்கு விளக்கமாகத் தேசிய கல்விமான்களும் நூல்களை ஆக்கியதனால் புராதன நாகரிகம் பாரம்பரியம் பற்றிய அறிவு மக்களிடையே விசாலமடைந்தன.
- **வலிசிங்க ஹரிச்சந்திர** அநுராதபுரத்திலுள்ள புனித இடங்களை பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- **அநகாரிக தர்மபால** இந்தியாவில் உள்ள புத்தகாய போன்ற புனித இடங்களைப் பாதுகாப்பதற்கு முன்வந்தார்.

I. Gowthaman

## மது ஒழிப்பு இயக்கம்

### மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகள்

- பிரித்தானியர் ஆட்சியில் 1912 மதுவரிச்சட்டம் காரணமாக மதுக்கடைகள் அதிகரித்தன.
- மதுபாவனை அதிகரித்துச் சென்றதால் சமூகத்தில் பல பிரச்சினைகள் தோன்றின.
- தேசிய கலாசாரம், சமயங்கள் மேலும் சீரழிந்தமை.
- பௌத்த மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்கள் மதுவுக்கு எதிராக பொதுமக்களை அறிவூட்டினர்.
- அநகாரிக தர்மபால, பியதாஸ சிறிசேன, ஜோன் த சில்வா பல்வேறு ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தினர்.

1. **அநகாரிக தர்மபால** பகிரங்க சொற்பொழிவு, பத்திரிகைகளுக்கு எழுதுதல் மூலம் மதுவின் தீமைகளை எடுத்துக் காண்பித்தார்.
2. **பியதாஸ சிறிசேன** தமது நாவல்களில் உணர்ச்சியை ஏற்படுத்தும் பல்வேறு கதாபாத்திரங்கள் மூலம் மதுவின் தீமைகளை எடுத்துக் காண்பித்தார்.
3. **ஜோன் த சில்வா** நாடகங்கள் **(பராபவ)** மூலம் மதுவினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் காண்பித்தார்.

மது ஒழிப்பு இயக்கத்தினூடாகப் பௌத்த தலைவர்கள் தேசியத் தலைவர்களாக மாறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

### மது ஒழிப்பு இயக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள்

- **இலங்கை மக்களின் கலாசாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் என்பன பாதுகாக்கப்பட்டன.**
- நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டமை.
- **தேசிய இயக்கங்கள் உருவாகின.**
- அரசியலில் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியமை.
- **அரசியல் தலைவர்கள் தோன்றியமை.**

## இந்துசமய மறுமலர்ச்சி

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

- **இந்துமத கலாசார மறுமலர்ச்சி இயக்கத்திற்கு தலைமை தாங்கி வடக்கிலிருந்து செயற்பட்டவர்.**
- மெதடிஸ்ட் சபை குருவானவர் ஒருவரின் கீழ் பணியாற்றியமையால் அவர்களின் செயற்பாடுகள் பற்றி நன்கறிந்திருந்தார்.
- **பேர்ஸிவல் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார்.**
- யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்.
- செய்யுள், உரைநடை மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

**உதாரணம்** - பெரிய புராணம், சேது புராணம், மணிமேகலை, கந்தபுராணம், சரசோதிமாலை, திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களை வெளியிட்டார்.

- **உதயபானு எனும் பத்திரிகையை ஆரம்பித்தார்.**
- தமிழ் மாணவர்களுக்காக மூன்று படிமுறைகளைக் கொண்ட பாலர் பாடத்தை வெளியிட்டார்.
- **1849ல் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார்.**
- 1853 இல் **சைவபரிபாலனசபை, இந்துக் கல்விச்சபை** என்பவற்றை நிறுவி பாடசாலைகள் ஆரம்பிக்கும் இயக்கத்தை மேலும் செயற்படுத்தினார்.
- **தமிழ் மாணவர்களிடையே ஆங்கிலக்கல்வியைப் பரப்ப 1872 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை யாழ் இந்துக் கல்லூரியாக இன்று பிரசித்தி பெற்றுள்ளது.**
- வெள்ளிக்கிழமை தோறும் வண்ணார்பண்ணை மண்டபத்தில் சைவப் பிரசங்கம் நடாத்தினார்.

I. Gowthaman

### சேர். பொன். இராமநாதன்

- ❖ 1851 இல் பிறந்தார். இந்து சமயப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உழைத்தார்.
- ❖ 1915 ஆம் ஆண்டு அரசாங்கம் இராணுவச் சட்டமூலம் பௌத்தர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகித்த போது சிங்களவர்களுக்காக குரல் கொடுத்தார்.
- ❖ **1913ல் மருதனார்மடத்தில் பெண்களுக்காக இராமநாதன் மகளிர் கல்லூரியை ஆரம்பித்தார்.**
- ❖ **1921ல் திருநெல்வேலியில் பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியை ஆரம்பித்தார்.**

### சேர். பொன். அருணாசலம்

- ❖ இந்துசமய மறுமலர்ச்சிக்கும் தமிழ் மொழி விருத்திக்குமாக பாடுபட்டார்.
- ❖ **1919ல் இலங்கைத் தேசிய சங்கத்தை உருவாக்கி அதன் முதலாவது தலைவராக விளங்கினார்.**
- ❖ சிங்களத் தலைவர்களோடு ஒன்று சேர்ந்து இலங்கையர் அரசியல் அதிகாரத்தைப் பெற உழைத்தார்.

## இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி

### அறிஞர் எம். சி. எம் சித்திலெப்பை

- ❖ 1832 இல் கண்டியில் பிறந்த எம்.சி.சித்திலெப்பை நவீன கல்வியின் முக்கியத்துவத்தை முஸ்லிம்கள் உணரச் செய்தார்.
- ❖ அரபு மொழியைக் கற்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியதுடன் ஆங்கில மொழியையும் கற்பதற்கு முஸ்லீம்களை ஊக்குவித்தார்.
- ❖ **1882 இல் முஸ்லீம் நேசன், ஞானதீபம் எனும் பத்திரிகைளை வெளியிட்டார்.**
- ❖ **கொழும்பு சாஹிரா கல்லூரி நிறுவுவதற்கு முன்னோடியாக விளங்கினார்.**
- ❖ முஸ்லீம்களின் கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்காக முஸ்லீம் கல்விச் சபையைத் தோற்றுவித்தார்.
- ❖ முஸ்லீம் பெண்கள் பாடசாலையைக் கண்டியில் அமைத்தார். இப்பாடசாலை இன்று சித்திலெப்பை மகாவித்தியாலயம் என்ற பெயரில் இயங்குகிறது.

**சமூக சீர்திருத்தவாதியாக முஸ்லீம்களுக்குத் தொண்டாற்றினார்.**

### டி. பி ஜாயா

- ❖ **1921 இல் கொழும்பு சாஹிரா கல்லூரி அதிபராகி அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.**
- ❖ இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் முஸ்லீம் மாணவர்களுக்காகப் பாடசாலைகள் அமைப்பதில் முன்னின்று செயற்பட்டார்.
- ❖ **சிலோன் முஸ்லீம் ரிவியு** எனும் சஞ்சிகையில் முஸ்லீம் மக்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கினார்.
- ❖ **பிரதிநிதிகள் சபையின் நியமன அங்கத்தவராகவும் 1947 இல் முதலாவது பாராளுமன்றத்தில் தொழில் சமூக சேவை அமைச்சராகவும் பணிபுரிந்து முஸ்லீம்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார்.**
- ❖ மக்காவில் இலங்கை ஹஜ்ஜிகளுக்கு விடுதி ஒன்றினை நிறுவும் பணியை மேற்கொண்டபோது மதினாவில் மரணமானார்.

**Note** - **1883 எகிப்து நாட்டிலிருந்து வருகை தந்த ஒராபி பாஷா இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளார்.**

I. Gowthaman